


## மகாசிவராத்திரி விரதம்

**காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்**
**நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்**
**நாணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்**
**சேணாரும் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்.**

ஒவ்வொரு மாத அமாவாசைக்கு முதல்நாள் இரவும் சிவராத்திரி என்று அழைக்கப்படும். அதிலே மாசிமாதத்தில் வரும் இரவு மகாசிவராத்திரி என்று பெருமை பெறுகின்றது. படைத்தல் தொழில்புரியும் பிரம்மாவும் காத்தல்தொழில் புரியும் மகாவிஷ்ணுவும் தமக்குள்ளே தாமே பெரியவர் என்று ஏற்படுத்திய விவாதத்திற்கு முடிவுசெய்து பெரியவர் யார் என்று அறியவைப்பதற்காக அனல்பிழம்பாய் அவர்கள் முன் தோன்றியது இந்த மகாசிவராத்திரி நாளாகும். இந்த தினத்திலே சிவனை அபிஷேகம் பஜனை செய்து வழிபாடு செய்வது எமக்கு நன்மை தரும். உலகம் முழுவதிலும் அண்மையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவினால் துன்பப்படும் எல்லா மக்களிற்கும் மன அமைதியை வேண்டி, நாமும் அவனருள்பெற்று நலமுடன் வாழ எமது குன்றத்துக் குமரன் ஆலயத்தில் எதிர்வரும் 12-02-10 வெள்ளிக்கிழமை கீழே தரப்படும் நேர ஒழுங்கின்படி பூஜை வழிபாடுகள் நடைபெறும். இதல் அனைவரையும் கலந்து இறையருள்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| முதலாம் ஜாம பூஜை | மாலை 6.00 மணி | அபிஷேகம், பூஜை |
| இரண்டாம் ஜாம பூஜை | இரவு 10.00 மணி | அபிஷேகம் பூஜை |
| மூன்றாம் ஜாம பூஜை | இரவு 12.00 மணி<br>(லிங்கோற்பவ காலம்.) | அபிஷேகம் பூஜை<br>திரிசதி அர்ச்சனை(300 நாமங்கள்) |
| நான்காம் ஜாம பூஜை | காலை 4.30 மணி | அபிஷேகம் பூஜை |

**குன்றத்துக் குமரன் ஆலயம்**
**139 Gray Court**
**Rock Bank. 3335.**
**Melway 355 G10**
**03 9747 1135**